කාර්යසාධන වාර්තාව 2023

செயலாற்றுகை அறிக்கை 2023

Performance Report 2023

ශීර්ෂය - 102

මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය

தலைப்பு - 102

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

Head - 102

Ministry of Finance, Economic Stabilization and National Policies





செயலாற்றுகை அறிக்கை
2023

தலைப்பு - 102

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
செலவினத் தலைப்பு இலக்கம்: 102

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம்/நிறைவேற்றுப் பொழிப்பு 3

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு 8

அத்தியாயம் 03 – 2023 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை 11

அத்தியாயம் 04 - செயலாற்றுகை சுட்டிகள் 17

அத்தியாயம் 05 - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை 17

அத்தியாயம் 06 - மனித வள விபரம் 19

அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை 20

அத்தியாயம் 01 - நிறுவனத்தின் விவரம் / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1. அறிமுகம்:

நிதி, பொருளாதார உறுதிப்பாடு, மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு இலங்கையில் பிரதான அமைச்சரவை அமைச்சு ஆகும்.

அதன்மூலம் நாட்டு மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதனை உறுதிப்படுத்துவம் பொருட்டு முதலீடு மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக நாட்டின் பொருளாதார மற்றும் நிதிக் கொள்கைகளை வகுத்தல், முன்மொழிதல் மற்றும் மதிப்பீடு செய்தல் என்பன பிரதானமாக மேற்கொள்ளப்படுகின்றன.

தற்போது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி கௌரவ ரணில் விக்ரமசிங்ஹ அவர்கள் நிதி, பொருளாதார உறுதிப்பாடு, மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சராக நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற அதேவேளையில், திரு. கே.எம். மஹிந்த சிறிவர்தன அவர்கள் திறைசேரியின் செயலாளராக கடமைகளை மேற்கொள்கின்றார்.

1.2 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்கள்

தூரநோக்கு

“துரித அபிவிருத்திக்கும் முதலீட்டுக்கும் வசதியளிக்கும் பொருளாதாரச் சூழலொன்றின் ஊடாக புதியதோர் இலங்கை”

பணிக்கூற்று

“மக்களுக்கு ஓர் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தினை வழங்குவதை உறுதிசெய்யும் பொருட்டு முதலீட்டையும் பொருளாதார அபிவிருத்தியையும் ஊக்குவிப்பதற்காக வினைத்திறனுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளையும், அரசிறைக் கொள்கைகளையும் ஆக்குதல், முன்மொழிதல், செயற்படுத்துதல் மற்றும் மதிப்பிடுதல்”

குறிக்கோள்கள்

- நாட்டின் தேசிய பொருளாதார மற்றும் நிதிக் கொள்கைகள் என்பனவற்றினையும் மூலோபாயங்களையும் தயாரித்தல்.
- அரசிறைக் கொள்கையை தயாரித்தல் மற்றும் பேரண்ட அரசிறைக் கொள்கை முகாமைத்துவம்
- தேசிய அபிவிருத்தி திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் நிதி வளங்களை முகாமை செய்தல்.
- தேசிய வரிக்கொள்கையினை முகாமை செய்தல் மற்றும் அரசாங்க வருமானத்தை வினைத்திறன்மிக்கதாகப் பயன்படுத்துதல்
- இலங்கை மத்திய வங்கியுடன் ஒன்றிணைந்து நாணயக் கொள்கைகளை உருவாக்குதல்.

- அரச மற்றும் தனியார்த்துறை செயற்பாடுகளை கூட்டிணைத்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்காக தனியார் துறையினருக்கு வசதியளித்தல்.
- சர்வதேச முகவர்களுடன் இணைந்து செயற்படுதல் மற்றும் திரட்டப்படுகின்ற வெளிநாட்டு நிதி வளங்களின் வினைத்திறன்மிக்க பயன்பாட்டினை உறுதிப்படுத்துதல்.
- திரட்டு நிதியினை முகாமை செய்தல், அதனை கணக்கு வைத்தல் மற்றும் நாட்டின் வருடாந்த கணக்குகளை சர்வதேச தராதரங்களுக்கு அமைய வெளியிடுதல்.

1.3 பிரதான பணிகள்

- அரசிறை மற்றும் வரி கணக்கிடல் விடயத்துடன் தொடர்புபட்ட திணைக்களங்கள் நியதிச் சட்டமுறை நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றின் கீழ் வருகின்ற மேற்கூறப்பட்ட விடயங்களில் கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை தயாரித்தல், மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
- பேரண்ட நிதி முகாமைத்துவம் மற்றும் அரசிறைக் கொள்கைகளைத் தயாரித்தல்.
- நிதி வளங்களை முகாமை செய்தல் மற்றும் வருடாந்த வரவு செலவு திட்டத்தை தயாரித்தல்.
- வரவு செலவு பற்றிய நிதி கட்டுப்பாட்டை நடைமுறைப்படுத்துதல் மற்றும் தேசிய வரவு செலவு திட்டத்தில் நடைமுறைப்படுத்துதல்.
- அரச வருமானத்தை வினைத்திறனுடன் பயன்படுத்துதல் மற்றும் தேசிய வரிக் கொள்கைகளை முகாமை செய்தல்.
- அரச நிதி ஒழுங்கு விதிகளை அமுல்படுத்துதல்.
- திரண்ட நிதியத்தை முகாமை செய்தல்.
- அரச செலவின முகாமைத்துவம்.
- அரசாங்கத்தின் பெறுகை ஆலோசனைச் சேவை.
- திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரச நிதிகளை நிர்வகித்தல்.
- அரச கணக்குகள் செயற்குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட திறைசேரி கூட்டங்களின் அறிக்கையை பேணிவருதல்.
- அமைச்சு மற்றும் திணைக்களங்களின் முகாமைத்துவ கணக்காய்வு மேம்படுத்துவதற்காக வழிகாட்டல்களை தயாரித்தல்.
- பதவி அணி முகாமைத்துவம்
- நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட ஏனைய சகல விடயங்களுடன் தொடர்புபட்ட விடயங்கள்.
- நிறுவனங்களை மேற்பார்வை செய்தல்.

ORGANIZATIONAL STRUCTURE - 2023

1.5 அமைச்சின் கீழ் காணப்படுகின்ற திணைக்களங்கள்

01 பொதுத் திறைசேரி
02 தேசிய திட்டமிடல் திணைக்களம்
03 கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வை திணைக்களம்
04 வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
05 அரசிறைக் கொள்கைத் திணைக்களம்
06 தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்
07 முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்
08 அரச நிதித் திணைக்களம்
09 திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
10 அரச கணக்குகள் திணைக்களம்
11 வர்த்தக மற்றும் முதலீட்டு கொள்கை திணைக்களம்
12 தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவத் திணைக்களம்
13 சட்ட அலுவல்கள் திணைக்களம்
14 முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களம்
15 அபிவிருத்தி நிதித் திணைக்களம்
16 பொதுத் தொழில்முயற்சி திணைக்களம்
17 கொம்ப்ட்ரோலர் ஜெனரல் அலுவலகம்
18 உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
19 இலங்கை சுங்கம்
20 மதுவரித் திணைக்களம்
21 விலைமதிப்பீட்டு திணைக்களம்
22 இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
23 தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்
24 தொலைத்தொடர்புத் திணைக்களம்
25 உள்நாட்டு வர்த்தகத் திணைக்களம்

1.6 அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள்/ நிதியங்கள்

01 அரச வளங்கள் முகாமைத்துவக் கூட்டுத்தாபனம்
02 தேசிய லொத்தர் சபை
03 அபிவிருத்தி லொத்தர் சபை
04 இலங்கை மத்திய வங்கி
05 அனைத்து அரச வங்கிகள், நிதி நிறுவனங்கள், காப்புறுதி மற்றும் அவற்றின் துணைக் கம்பனிகளும் நிறுவனங்களும்
06 இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு
07 இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் அவற்றின் துணைக் கம்பனிகளும் இணை நிறுவனங்களும்
08 இலங்கை கடன் தகவல் பணியகம்
09 இலங்கை பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழு
10 இலங்கை கணக்குகள் மற்றும் கணக்காய்வு தர மீளாய்வுச் சபை
11 இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு
12 இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்
13 வீடமைப்பு அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபனம்
14 அரசு ஈட்டு, முதலீட்டு வங்கி
15 பிரதேச அபிவிருத்தி வங்கி
16 வரி மேன்முறையீட்டு ஆணைக்குழு
17 கொள்கை கற்கைகள் நிறுவனம்
18 நிலைபேறான அபிவிருத்தி சபை
19 நலன்புரி நன்மைகள் சபை
20 அரசாங்க சேவை பரஸ்பர சகாய சங்கம்

21 வேலைநிறுத்தங்கள், கலவரம், சிவில் பிரச்சினை மற்றும் பயங்கரவாதம் தொடர்பான நிதியம்.
22 தேசிய காப்பீட்டு அறக்கட்டளை நிதி
23 ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்
24 லோகோர் சீமாட்டி நிதியம்
25 வனசீவராசி நம்பிக்கை நிதியம்
26 இலங்கை வெகுஜன ஊடக பயிற்சி நிறுவனம்
27 பருப்பு மற்றும் தானியங்கள் ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி ஆணையம்
28 ஜனத்தா .ஃபெர்டிலைசர் எண்டர்பிரைசஸ் லிமிடெட்
29 குழந்தைகளைப் பாதுகாப்போம் தேசிய நம்பிக்கை நிதியம்

குறைந்த செயற்பாட்டைக் கொண்ட தொழில்முயற்சிகள் அல்லது குறைந்த பயன்பாட்டைக் கொண்ட சொத்துக்களை எழுச்சிபெறச் செய்தல் (நீக்கதல்) சட்டத்தின் கீழ் திறைசேரியின் செயலாளர் வசமுள்ள நிறுவனங்கள்

30 ஸ்ரீ லங்கா டெலிகொம் மற்றும் அதன் துணை நிறுவனங்களும் தொடர்புடைய நிறுவனங்களும்
31 கொழும்பு தாமரை கோபுர முகாமைத்துவ நிறுவனம் (தனி.) வரை.
32 வடகடல் வரை.
33 இலங்கை திரிபோஷ நிறுவனம் வரை.
34 கல்லோயா ப்ளான்டேஷன்
35 தேசிய உப்பு
36 ஸ்ரீ லங்கா சீமெந்து கூட்டுத்தாபனம்
37 புரந்தன் கெமிக்கல்
38 பீசீசீ (தனி.) வரை
39 இலங்கை நிறுவன கூட்டுத்தாபனம்
40 மகிந்த ராஜபக்ஷ தொலை சினிமா பார்க்
41 இலங்கை பொது வர்த்தக கம்பனி வரை.
42 சகஷ்ய முதலீட்டு வரை.
43 தேசிய இயந்திர நிறுவனம்

1.7 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் விபரம் (இருப்பின்)

	அ) கருத்திட்டத்தின் பெயர்	**ஆ) கொடைவழங்கும் முகவர்**	**இ) கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட செலவு – ரூபா மில்.**	**கருத்திட்டக் காலம்**
01	சமூகப் பாதுகாப்பு வலை கருத்திட்டம் (SSNP)	உலக வங்கி	அமெரிக்க டொலர் 75 மில்லியன்	02 வருடங்கள்
02	நிதித்துறையை நவீனமயப்படுத்துவதற்கான கருத்திட்டம் (FSMP)	உலக வங்கி சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் (IDA)	அமெரிக்க டொலர் 75 மில்லியன்	05 வருடங்கள்

அத்தியாயம் 02 - முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

2.1 விசேட வெற்றிகள், சவால்கள் மற்றும் எதிர்க்கால இலக்குகள்

2.1.1 விசேட வெற்றிகள், சவால்கள்

2023 ஆம் ஆண்டு காலப் பகுதி தொடர்பாக நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் 120 பாதீட்டு முன் மொழிவுகள் முன் வைக்கப்பட்டுள்ளன. அம் முன் மொழிவுகளின் கீழ் வருமானம் தொடர்பாக 32 முன் மொழிவுகளும், செலவு தொடர்பாக 30 முன் மொழிவுகளும், கொள்கைகள் தொடர்பாக 58 முன் மொழிவுகளும் உள்ளடங்குகின்றன. 2023 ஆம் ஆண்டின் இறுதியளவில் இவ் 120 முன் மொழிவுகளின் கீழும் வருமானம் தொடர்பான 84% முன் மொழிவுகள் நிறைவு செய்யப்பட்டிருப்பதுடன், 16% ஆன முன் மொழிவுகள் செயற்படுகை கட்டத்தில் காணப்பட்டன. செலவு தொடர்பான முன் மொழிவு வகுதிகள் பிற அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களின் கீழ் செயற்படுத்தப்பட்ட வண்ணமிருப்பதுடன், அக் கருத்திட்டங்களில் 90% ஆனவை தற்சமயம் செயற்பாட்டு நிலையில் காணப்படுகின்றன. அவ்வாறே கொள்கை ரீதியான முன் மொழிவுகளில் 24% ஆனவை நிறைவேற்றப்பட்டிருப்பதுடன், 52% ஆனவை செயற்பாட்டு நிலையில் காணப்படுகின்றன.

2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மேலெழுந்த அண்ணிய செலாவணி தொடர்பான நெருக்கடி நிலை காரணமாக ஏற்பட்ட சவால் மிக்க நிலையை 2023 ஆம் ஆண்டில் தீர்த்த வண்ணமும், இன்னல்களை இயன்றளவுக்கு குறைத்த வண்ணமும் பொது மக்களது வாழ்க்கை நெறி முறையை சாதாரண நிலையில் முன்னெடுக்கக் கூடிய வகையில் பொருளாதாரத்தை கையாளக் கூடிய திறன் எமக்குக் கிடைத்தமை எமது அமைச்சுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றியாகும்.

2022 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார மறு சீரமைப்பு மற்றும் செயற்படுத்தப்பட்ட கொள்கை ரீதியான தீர்மானங்கள் காரணமாக 2023 ஆம் ஆண்டில் சமூக, பொருளாதார நிலைப்பாடுகளை முகாமைத்துவப்படுத்தக் கூடிய வாய்ப்பு கிடைத்தது.

2022 ஆம் ஆண்டில் முகங் கொடுத்த எரிபொருள், எரி வாயு மற்றும் உரத் தட்டுப்பாட்டுக்கு 2023 ஆம் ஆண்டளவில் தீர்வுகளைக் கண்டறியக் கூடிய வாய்ப்பு கிடைத்தமை, நாம் பின்பற்றுகின்ற மறு சீரமைப்புகளுக்கான வெற்றிப் படிகளை சான்றுபடுத்துகின்ற உதாரணங்களாகும்.

கடந்த 2023 ஆம் ஆண்டில் சவால் மிக்க பொருளாதார நிலைகளின் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிகள் அடையப் பெற்றுள்ளன.

- அரச வரிக் கொள்கையில் மறு சீரமைப்புகள் மேற்கொள்ளப்பட்ட வண்ணமிருத்தல்.
- வரி வருமானம் விருத்தியடைதல்.
- 2023 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதமளவில் பண வீக்கத்தை 1.5% வரை குறைக்கக் கூடிய வாய்ப்பு கிடைத்தல்.
- அண்ணிய செலாவணி கையிருப்பு வளர்ச்சியடைதல்.
- அரச ஊழியர்களது சம்பளம், ஓய்வூதியம், வாழ்க்கை செலவுக் கொடுப்பனவு ஆகியவற்றை அதிகரிப்பதற்கு முன் மொழிவுகளை முன் வைத்தல்.
- அரச ஊழியர்களது இடர்க் கடன் தொடர்பாக, அனைத்து அரச ஊழியர்களுக்கும் அவற்றை மீள் செலுத்துவதற்கான முன் மொழிவுகள் முன் வைக்கப்படுதல்.
- அஸ்வெசும நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்ற நிதியுதவிகளை அதிகரிப்பதற்குத் திட்டங்கள் வகுக்கப்படுதல்.
- பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித் திட்டத்தை மீள் ஆரம்பித்தல்.
- அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பான முன் மொழிவுகளை அனுமதித்தல் மற்றும் அவற்றுக்கான நிதியங்களை ஒதுக்கிடுதல்.

சவால்கள்

- அரச கடன்களை மீள் கட்டமைத்தல்.
- அரச வரிகள் மேலுயர்த்தப்பட்டமையால் பொது மக்களுக்கு வரிச் சுமை அதிகரிக்கப்படுதல்.
- அரச ஊழியர்களது சம்பளம் அதிகரிக்கப்படுதல்.
- பொருளாதார இன்னல்களுக்கு உள்ளான பொது மக்களுக்கு நிவாரணங்களை வழங்குதல்.
- தொடர்ச்சியான மற்றும் தரமுயர்ந்த சுகாதார சேவை வழங்கப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு நிதி வசதிகளை உறுவமைத்தல்.

2.1.2 எதிர்வரும் இலக்குகள்

மேற்குறித்த கொள்கை ரீதியான தீர்மானங்களின் அடிப்படையில், 2023 ஆம் ஆண்டு காலப் பகுதிக்குத் தேவையான உபாய வழி முறைகளை 2023 ஆம் ஆண்டில் மேலும் முன்னெடுத்த வண்ணம் நிலையான பொருளாதார நிலைப்பாட்டை நோக்கி இலங்கையை வழிகாட்டுதல் மிக முக்கிய இலக்காகக் காணப்படுகின்றது.

அவ்வாறே 2022 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிலிருந்து தொடர்ச்சியாக பொருளாதார இடர் நிலை அறிக்கையிடப்பட்ட பிற்பாடு, 2023 ஆம் ஆண்டின் மூன்றாவது காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் சாதகமான பொருளாதார விருத்தி நிலையை அடைவதாக அறிக்கையிடப்பட்டது. 2023 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் பொருளாதார செயன் முறைகள் தொடர்ச்சியாகவும், மிக வேகமாவும் வளர்ச்சியடையக் கூடிய போக்கை எதிர்வரும் பொருளாதாரச் சுட்டிகளின் ஊடாக அடையாளம் காணலாம். 2024 ஆம் ஆண்டில் வருடாந்த பொருளாதார விருத்தி நேரொத்த போக்கைக் காட்டுகின்றது. அது அண்மைக் கால தோற்றுவாய் நிலையை எட்டுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இதனடிப்படையில், அரச சேவையை மறு சீரமைத்தல், ஊழியர்களின் எண்ணிக்கையை ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்ட நடை முறையின் கீழ் முகாமைத்துவப்படுத்துதல், நலன்புரி நிகழ்ச்சிகளின் ஊடாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்களுக்கென 2023 ஆம் ஆண்டிலிருந்து முன்னெடுக்கப்படுகின்ற நிகழ்ச்சிகளை எதிர்வரும் காலப் பகுதிகளிலும் மென்மேலும் செயற்படுத்துதல் மற்றும் ஏனைய பொருளாதார உபாய வழி முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் பொருளாதாரத்தின் தன்னியக்க நிலையை எட்டும் இலக்கை நோக்கி நகர்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

செயலாளர் (பதில்)
நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

A. K. Seneviratne
Deputy Secretary to the Treasury
Ministry of Finance
General Treasury
Colombo - 01.

3.1 நிதிச் செயலாற்றகைப் பற்றிய கூற்று

ஏசீஏ- எப்

2023 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2023		குறிப்பு	உண்மை நிலை 2023	2022	
-	**வருமானப் பெறுகைகள்**		-	-	
-	வருமான வரி	1	-	-	
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	
-	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	-	-	
-	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		-	-	
-	**வருமானமற்ற பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		54,374,983,038	1,814,034,102	ஏசீஏ-3
-	வைப்புகள்		3,458,503,757	561,733,405	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		33,092,275	28,342,232	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		19,529,944	19,515,207	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**57,886,109,014**	2,423,624,946	
-	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)**		**57,886,109,014**	2,423,624,946	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		1,441,737,294	161	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		56,444,371,720	2,423,624,786	
	கழி : செலவினம்				
-	**மீண்டுவரும் செலவினம்**		-	-	
400,205,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	405,591,699	495,689,568	
694,130,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	733,181,829	704,327,251	ஏசீஏ-2(ii)
181,200,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	52,469,853,053	418,073,383	
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
1,000,000	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	156,626	455,956	
1,276,535,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (உ)**		**53,608,783,206**	1,618,546,158	
	மூலதன செலவினம்				
56,700,000	முலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	22,885,305	7,010,051	
969,700,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	806,185,330	62,301,300	
9,400,000	மூலதன மாற்றல்கள்	12	17,033,000	50,978,000	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	
25,400,000	திறன் விருத்தி	14	11,547,859	4,139,585	
1,164,700,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	371,350,229	1,119,702,558	
2,225,900,000	மொத்த மூலதனம் செலவினம் (எ)		**1,229,001,724**	1,244,131,494	
	வைப்புக் கொடுப்பனவுகள்		3,069,923,232	533,842,802	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		29,238,772	27,098,215	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		120,550	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		3,099,282,555	560,941,017	
	மொத்த செலவினம் ஐ = (உ+எ+ஏ)		57,937,067,484	3,423,618,669	
-	டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)		(1,492,695,764)	(999,993,883)	
	பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி		(1,492,695,764)	(999,993,883)	ஏசீஏ-7
	டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி		-	-	ஏசீஏ-3
			(1,492,695,764)	(999,993,883)	

1

ஏசீஏ -பீ

2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2023 ரூபா	2022 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண	ஏசீஏ-6	14,414,398,865	14,383,952,957
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	63,945,479	85,694,633
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	-	-
மொத்த சொத்துக்கள்		**14,478,344,344**	**14,469,647,590**
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		(570,141,823)	(177,747,571)
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		14,414,398,865	14,383,952,957
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	-	17,935,426
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	634,087,302	245,506,778
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	-	-
மொத்தப் பொறுப்புக்கள்		**14,478,344,344**	**14,469,647,590**

பக்க இலக்கம் 6 முதல் வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் முதல் வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். இந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்கியதாக மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளையில் இங்கு நிதிக்கூற்றுக்களின் குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளவாறு, மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்
பெயர்:	பெயர்:	பெயர்:
பதவி :	பதவி :	திகதி : 26.02.2024
திகதி : 27/02/24	திகதி : 26.02.2024	A.A.T.K. Adikari
K.M.M. Siriwardana	D.H.S. Pullaperuma	Chief Finance Officer
Secretary to the Treasury and	Additional Secretary	Ministry of Finance, Economic Stabilization
Secretary to the Ministry of Finance,	Ministry of Finance,	and National Policies
Economic Stabilization and National Policies	Economic Stabilization and National Policies	
The Secretariat, Colombo 01.		

ஏசீஏ- சீ

2023 டிசம்பர் 31 இல் உள்ளவாறான காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2023 ரூபா	2022 ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	-	-
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	19,409,394	19,515,207
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	-	-
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	54,374,983,038	1,814,034,102
முற்பணங்களை அறவிடல்	19,573,899	26,873,726
வைப்புக்களின் பெறுகை	3,458,503,757	559,514,927
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**57,872,470,088**	**2,419,937,962**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	1,117,167,415	964,402,030
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	51,906,889,692	36,651,151
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	178,956,448	45,190,074
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	1,441,737,294	161
முற்பணக் கொடுப்பனவு	15,530,357	25,868,728
வைப்புக் கொடுப்பனவு	3,069,923,232	533,842,802
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**57,730,204,438**	**1,605,954,946**
தொழிற்பாடு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**142,265,650**	**813,983,016**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
மூலதன செலவினம்	142,265,650	813,983,016
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	**142,265,650**	**813,983,016**
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	**(142,265,650)**	**(813,983,016)**
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
உள்ளூர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)	-	-
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
உள்ளூர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)	-	-
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)	-	-
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	-	-
ஜனவரி 01 ஆம் திகதியீலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியீலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	-	-

3.4 நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

அறிக்கையிடும் அடிப்படை

1) **அறிக்கையிடல் காலப்பகுதி**

இந் நிதிக் கூற்றுக்களுக்கான அறிக்கையிடல் காலப்பகுதி 2023 சனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையானதாகும்.

2) **அளவீட்டுக்கான அடிப்படை**

நிதிக்கூற்றுக்களானது, வரலாற்றுக் கிரய அடிப்படையிலேயே தயாரிக்கப்பட்டுள்ள அதேவேளையில், ஒரு சில சொத்துக்களின் வரலாற்றுக் கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு விதத்தில் குறிப்பிடப்பட்டில்லாத போது கணக்கு தயாரிப்பு நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்ட காசு அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

நிதிக் கூற்றுக்களிலுள்ள இலக்கங்கள் இலங்கை ரூபாவில் கிட்டிய ரூபாய்க்கு தயாரிக்கப்படல் வேண்டும்.

3) **வருமானத்தை அடையாளங்காணுதல்**

நாணயமாற்று மற்றும் நாணயமாற்று அல்லாத வருமானங்கள் அவை கிடைக்கக்கூடிய காலப்பகுதியை கவனத்திற்கொள்ளாது, காசு கிடைக்கக் கூடிய காலப்பகுதிக்குள் வருமானமாக அடையாளங் காணப்படுகின்றது.

4) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணம் ஆகியவற்றின் அங்கீகாரம் மற்றும் அளவீடு**

சொத்துக்கள் நம்பத்தகுந்த அடிப்படையில் அளவிடப்படுகின்றதா மற்றும் நிறுவனத்தின் சொத்துக்கள் எதிர்கால பொருளாதார நலன்களுடன் தொடர்புடையதாக இருக்கின்றதா என்பதற்கான நிகழ்தகவின் அடிப்படையிலேயே சொத்து, இயந்திரம் மற்றும் உபகரணங்கள் அங்கீகரிக்கப்படுகின்றன.

கிரயமுறை பொருத்தமில்லாத சந்தர்ப்பத்திலேயே சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்கள் கிரயம் மற்றும் மறமதிப்பீட்டு முறையில் அளவீடு செய்யப்படுகின்றது.

5) **சொத்து, இயந்திர மற்றும் உபகரணங்களின் ஒதுக்கம்**

இந்த மீள்மதிப்பு ஒதுக்கீட்டுக் கணக்கானது சொத்து, இயந்திர மற்றும் உபகரண கணக்கின் தொடர்புபட்டதாகும்.

6) **காசு மற்றும் காசுக்கு சமமானவை**

காசு மற்றும் காசுக்கு சமமானவை 2023 டிசம்பர் 31 இல் உள்ள உள்நாட்டு நாணயத்தாள்கள் மற்றும் நாணயங்களை உள்ளடக்கியதாகும்.

* ஒரு குறிப்பிட்ட அறிக்கையிடல் நிறுவனத்திற்கு குறிப்பிட்ட பரிவர்த்தனைகள் இருக்கும் சந்தர்ப்பங்களில் பொருத்தமான தகவல்களை உள்ளடக்கலாம் மற்றும் மாதிரிப்படிவங்களில் தேவைக்கேற்ப திருத்தங்களைச் செய்யலாம். அந்த குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுக்கு தேவையான வெளிப்படுத்தல் "அறிக்கையிடலின் அடிப்படை" என்பதற்குக் கீழ் சேர்க்கப்படலாம்.

* அறிக்கையிடல் நிறுவனத்திற்கு தொடர்புடைய கணக்கியல் கொள்கைகள் மட்டுமே "அறிக்கையிடலின் அடிப்படை" இன் கீழ் வெளிப்படுத் தப்படவேண்டும்.

3.5 வருமானத்தை திரட்டுவதன் செயலாற்றுகை

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		திரட்டப்பட்ட வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூபா)	இறுதி வருமான மதிப்பீட்டின் சதவீதமாக %
	ஏற்புடையதல்ல				

3.6 ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்துவதன் செயலாற்றுகை

ஏற்பாடுகளின் வகை	ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகள்		உண்மை செலவினம் (ரூபா)	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் முடிவுறுத்தப்பட்ட இறுதி ஏற்பாட்டின் சதவீதமாக %
	ஆரம்ப ஏற்பாடு (ரூபா)	இறுதி ஏற்பாடு (ரூபா)		
மீண்டுவரும்	1,276,535,000.00	57,152,156,487.00	53,608,783,206.00	93.8%
மூலதனம்	2,225,900,000.00	2,272,161,200.00	1,229,001,724.00	54.08%

3.7 நி.ஒ. 208 இன் பிரகாரம் ஏனைய அமைச்சர்களின் / திணைக்களங்களின் பிரதிநிதி என்ற வகையில் இந்த திணைக்களத்திற்கு/ மாவட்ட செயலகத்திற்கு/ மாகாண சபைக்கு வழங்கப்பட்ட ஏற்பாடுகள்

தொடர் இலக்கம்	ஏற்பாடுகளை பெற்ற அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்	ஏற்பாட்டின் நோக்கம்	ஏற்பாடு		உண்மை செலவினம்	பயன்படுத்தப்பட்ட ஏற்பாடுகள் முடிவுறுத்தப்பட்ட இறுதி ஏற்பாட்டின் சதவீதமாக %
			ஆரம்ப ஏற்பாடு	இறுதி ஏற்பாடு		
01	வன ஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு	சினோ லங்கா கட்டடத்தின் வாடகையின் ஒரு பகுதியைச் செலுத்துவதற்கு	67,192,620.80	67,192,620.80	67,192,620.80	100%

02	வன ஜீவராசிகள் மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சு	சினோ லங்கா கட்டடத்தின் மின்சாரம் மற்றும் நீர்	11,867,500.00	11,867,500.00	11,337,933.86	95.54%
03	ஓய்வூதியத் திணைக்களம்	திரு. சீ.ஆர். மனம்பேரி, திருமதி டபிள்யு,என்.டீ.சில்வா, திருமதி டீ.கே.என். முத்துமலி ஆகியோரின் கடன் நிலுவைகளைத் தீர்த்தல்	425,894.05	425,894.05	425,894.05	100%
04	கைத்தொழில் அமைச்சு	மாந்தை உப்புக் கம்பனியில் மேசை உப்பு தயாரிப்புப் பொறித் தொகுதியொன்றை தேசிய உப்புக் கம்பனிக்காக நிறுவுவதற்கு.	100,000,000.00	100,000,000.00	100,000,000.00	100%

3.8 நிதி அல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை

வருமான குறியீடு	குறியீட்டின் விபரம்	2022.12.31ஆம் திகதியில் உள்ளவாறு திறைசேரி ஆய்வு அறிக்கைக்கு அமைவாக நிலுவை	2022.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை அறிக்கைக்கு அமைவாக நிலுவை	முன்வரும் காலங்களில் கணக்கீடு செய்யப்பட உள்ளவை	முன்னேற்றத்தை சதவீதமாக அறிக்கையிடல் %
9151	கட்டிடம் மற்றும் கட்டமைப்பு	-	3,755,666,953.96	-	100%
9152	இயந்திரசாதனம்	-	2,217,735,778.65	-	
9153	காணி	-	8,389,900,000.00	-	
9154	அருவமான சொத்துக்கள்	-	51,096,132.08	-	
9155	உயிரியல் சொத்துக்கள்	-	-	-	
9160	நடைபெறும் பணிகள்	-	-	-	
9180	குத்தகை சொத்துக்கள்	-	-	-	

3.9 கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

பின்னிணைப்பு 01 ஆக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 04 – செயலாற்றுகைச் சுட்டிகள்

நிறுவனத்தின் செயலாற்றகைச் சுட்டிகள் (செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில்)

குறிப்பீட்டு சுட்டிகள்	எதிர்பார்த்த வெளியீட்டின் சதவீதமாக (%) உண்மையான வெளியீடு		
	100%- 90%	75%-89%	50%- 74%
திட்டமிடப்பட்ட உள்நாட்டு பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை	√		
கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகளின் எண்ணிக்கை	√		
கிடைக்கப்பெற்ற வெளிநாட்டு லீவு விண்ணப்பங்களின் எண்ணிக்கை	√		
அரசாங்க சேவை மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு அனுப்பப்பட்ட வெளிநாட்டு லீவு விண்ணப்பங்களின் எண்ணிக்கை	√		
நியமிக்கப்பட்ட திறைசேரி பிரதிநிதிகளின் எண்ணிக்கை	√		
சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனங்களின் எண்ணிக்கை	√		

- அரச தொழில் முனைவுகள் தொடர்பான கணக்குகளை சீராகப் பராமரித்தல், நிதி செயற்படுத்துகைப் பணிகளை மேற்பார்வையிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல், தொடர்புடைய நிறுவனங்களுக்குத் தேவையான ஊழியர்களை இணைத்துக் கொள்ளுதல் போன்ற செயற்பாடுகளுக்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

- சமாந்தர நிலை அமைச்சாக அரச தொழில் முனைவுகளின் ஒட்டு மொத்த நிர்வாக செயற்பாடுகள் தொடர்பாகவும் கொள்கை ரீதியான தீர்மானங்களை எட்டுவதற்குத் தேவையான வழிகாட்டிகளை முன்னெடுத்தல் மற்றும் மேற்பார்வை செயற்பாடுகள் தொடர்புடைய காலப் பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

- நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் விடயப் பரப்பினுள் இயங்குகின்ற தொழில் முனைவுகளின் நிதி விருத்தி மற்றும் பௌதீக விருத்தி தொடர்பாக நன்னெறி மிக்க செயலாற்றுகை உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன், தொடர்புடைய அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தில் பங்கேற்ற பிற்பாடு பின்னாய்வு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கும், பாராளுமன்றத்தின் பொது மனுக் குழு கூட்டத்தில் கலந்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரச தொழில் முயற்சிகளின் வருடாந்த அறிக்கைகள் இன்றளவிலும் கிடைக்கப் பெற்ற வண்ணமிருப்பதுடன், கிடைக்கப் பெற்ற அனைத்து அறிக்கைகளும் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் விடயப் பரப்பினுள் உள்ளடங்குகின்ர பெறுகைக் குழுக்களை நியமிக்கும் பொருட்டு முன் மொழிவுகளை முன் வைத்தல், குழுக்களுக்கென பிரதிநிதிகளை நியமித்தல் போன்ற செயற்பாடுகள் குறித்த காலப் பகுதியினுள் முன்னெடுக்கப்பட்டன.
- நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் இன்றளவிலும் செயற்பட்ட வண்ணமுள்ள கருத்திட்டங்களின் நிதி சார் விருத்தி மற்றும் பௌதீக விருத்தி தொடர்பாக மேற்பார்வையிட்டு தொடர்புடைய அறிக்கைகளை காலாண்டு அடிப்படையில் கருத்திட்ட முகாமைத்துவ மற்றும் மேற்பார்வை திணைக்களத்துக்கு முன் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத் தகவல்கள் உள்ளடங்கிய அறிக்கைகள் இத் திணைக்களத்தினால் அமைச்சரவைக்கு காலாண்டு விருத்தியை அறிவிக்கும் பொருட்டு முன் வைக்கப்படுகின்றன.

அத்தியாயம் 05 – நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடையும் செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

பேண்தகு அபிவிருத்தியின் போது நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு உரித்தான பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை வெவ்வேறாக அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை. அதனடிப்படையில், நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கும், திறைசேரிக்கும் உரித்தான பல்வேறு திணைக்களங்களின் ஊடாக, தேசிய ரீதியாக பேண்தகு பொருளாதார முகாமைத்துவம் தொடர்பாக குறித்தொதுக்கப்பட்ட திணைக்களமொன்று நிலை நாட்டப்பட்டிருப்பதுடன், அதன் ஊடாக பொருளாதார வளங்கள் தொடர்பாக அனைவருக்கும் உட் பிரவேசிக்கக் கூடிய உரிமை உறுதிப்படுத்தப்படும். இதன் கீழான முன்னுரிமைகளுக்கு உட்பட்டதாக ஒவ்வொரு பிரிவுகளுடனும் தொடர்புடைய பொருளாதார விருத்திக் கொள்கை உருவாக்கம், செயற்படுத்துகை மற்றும் மேற்பார்வை போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். அச் செயன் முறையினுள் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை பூர்த்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதன் போது நிதி சார் கொள்கைகள் மற்றும் நிதியங்களை ஒதுக்கிடுதல், அபிவிருத்திக் கொள்கைகளின் திட்டமிடுகை மற்றும் நிகழ்ச்சிகளை பேண்தகு அபிவிருத்தி தொடர்பான 17 நோக்கங்களுக்கு இசைவாக்கமடைந்த வண்ணம் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே, ஒவ்வொரு அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்கள் தத்தமக்குரிய அபிவிருத்தி நிகழ்ச்சிகள் மற்றும் செயலாற்றுகை திட்டங்களை தயாரிக்கையில் அந் நிறுவனங்களுடன் தொடர்புடைய பேண்தகு அபிவிருத்தி நோக்கங்களை அதனுடன் ஒத்திசைவு செய்யத் தேவையான ஆலோசனைகள், வழிகாட்டிகள் மற்றும் நிதியங்கள் நிதி அமைச்சினால் வழங்கப்படும்.

5.2 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கான வெற்றி மற்றும் சவால்கள்

2023 ஆம் ஆண்டில் நிலவிய அரச நிதி இடர்ப்பாட்டு நிலை காரணமாக அரசின் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் சமூக நலன்புரி செயற்பாடுகள் தொடர்பான அனைத்து நிகழ்ச்சிகள் தொடர்பாகவும் மீள் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இதன் வாயிலாக அத்தியாவசியமான நிகழ்ச்சிகள் மற்றும் கருத்திட்டங்களுடன் தொடர்புடையதாக முன்னுரிமைகள் அடையாளம் காணப்பட்டதுடன், அரச நிதிக் கட்டுப்பாட்டு தொடர்பாக செலவு முகாமைத்துவக் கொள்கைக்கு முன்னுரிமை வழங்கிய வண்ணம் உபாய வழி அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நடப்பு நடைமுறை பொருளாதார இடர்ப்பாட்டு நிலைகளின் கீழ் சமூக நியாயப்படுத்துகையை உறுதிப்படுத்துதல் மற்றும் வறுமையை குறைப்பதற்கும், பொது மக்களது சுகாதார மற்றும் போசாக்கு நிலைகளை சீராகப் பேணுவதன் வாயிலாகவும் நன்னெறி மிக்க வாழ்க்கை நிலைகளை வழங்கும் பொருட்டு தொடர்ச்சியாக நிகழ்ச்சிகளை முன்னெடுப்பதற்கும், தேவையான நிதியுதவிகளை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், சமுர்த்தி நிவாரணம் மற்றும் வாழ்வாதார நிதியுதவிகளை பெற்றுக் கொள்ளும் எதிர்ப்பார்ப்புடனான குடும்பங்களுக்கு அஸ்வெசும நிகழ்ச்சியின் கீழ் இடம் பெயர்ந்துள்ள 4 இலட்சம் குடும்பங்களுக்கு ரூபா 2,500 எனும் அடிப்படையிலும், இன்னல் நிலைக்கு உள்ளான 4 இலட்சம் குடும்பங்களுக்கு ரூபா 5,000 எனும் அடிப்படையிலும், 8 இலட்சம் வரிய குடும்பங்களுக்கு ரூபா 8,500 எனும் அடிப்படையிலும், வறுமை எல்லைக் கோட்டிலுள்ள 4 இலட்சம் குடும்பங்களுக்கு ரூபா 15,000 எனும் அடிப்படையிலும் 20 இலட்சம் குடி மக்களுக்கு மாதாந்த நிவாரணங்களை கையளிப்பதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்ததுடன், விண்ணப் படிவங்களை கருத்திற் கொண்டு கிட்டத்தட்ட 17 இலட்சம் குடி மக்களுக்கு 2023 வருடம் முழுதும் அத்தகைய அடிப்படையில் நிவாரணங்களை கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், அஸ்வெசும நிகழ்ச்சித் திட்டத்திற்குத் தகைமை பெறாதோருக்கு மேன் முறையீடுகளை முன் வைக்கும் பொருட்டு கால எல்லை வழங்கப்பட்டதுடன், அம் மேன் முறையீடுகள் ஆராயப்படும் வரை சமுர்த்தி, ஊனம், சிறு நீராக மற்றும் முதியோர் கொடுப்பனவுகள் போன்ற கொடுப்பனவுகளை பெற்றுக் கொண்டோருக்கு அது வரை கிடைக்கப் பெற்ற அக் கொடுப்பனவுகளை அதே அடிப்படையில் கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டதுட. மேன் முறையீடுகளை ஆராய்ந்த பிற்பாடு கிட்டத்தட்ட 24 இலட்சம் பேருக்கு 2024 ஆம் ஆண்டில் அஸ்வெசும பலன்களை பெற்றுக் கொடுப்பதற்கும், அந் நிகழ்ச்சியை 3 வருட காலப் பகுதிக்கு முன்னெடுப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

போசாக்குத் தேவை தொடர்பாக அடையாளம் காணப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டமை மற்றும் கர்ப்பிணித் தாய் மாருக்கு நிதியுதவிகளை வழங்கும் செயன் முறையும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது. பேண்தகு அபிவிருத்தி இலக்கு 01, 02, 03 மற்றும் 04 தொடர்பாக முன்னுரிமையை வழங்குதல் அரசின் தலையாய பொறுப்பென கருதி இலவசக் கல்வி மற்றும் சுகாதார சேவைகளை இயன்றளவுக்கு தரமுயர்ந்த நிலையில் முன்னெடுப்பதற்குத் தேவையான அனைத்து நிதியங்களும் வழங்கப்பட்ட வண்ணமும், அத்தியாவசியமான அனைத்து நிகழ்ச்சிகளும் செயற்படுத்தப்பட்ட வண்ணமும், பொருளாதார இன்னல் நிலைக்கும் மத்தியிலும் அத்தியாவசியமான சேவைகளை சுகாதாரப் பிரிவு தொடர்பாக இயன்றளவுக்கு வழங்கும் பொருட்டும் நிதியங்கள் ஒதுக்கப்பட்டன.

வெளி நாட்டுக் கடன்களின் கீழ் தங்கியிருக்கும் நிலையை இடை நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பினும், உள் நாட்டில் நிலவிய நிதி இடர்ப்பாட்டு நிலைக்கு மத்தியில் புதிதாக அபிவிருத்திக் கருத்திட்டங்களின் ஊடாக உட்கட்டமைப்பு வசதிகளை மேலும் விருத்தி செய்வதற்கும், அத்தியாவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை முன்னெடுப்பதற்கும், பராமரிப்புப் பணிகள் தொடர்பாகவும் அரசு தலையீட்டை மேற்கொண்டதுடன், பொது மக்களது வாழ்க்கை நிலைகளை பேணுவதற்குத் தேவையான பிரதானமான பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் தொடர்பாக அதிகளவில் கவனம் செலுத்தப்பட்டு உலக வங்கியினதும், ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் நிதியுதவிகள் மற்றும் மேற்பார்வையின் கீழ் நன்னெறி மிக்க வாழ்க்கை நிலைகளை பொது மக்களுக்கு உறுவமைத்துக் கொடுப்பதற்கும், பொருளாதார இன்னல்களைக் குறைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்கக் கூடிய வகையில் அந் நிகழ்ச்சிகளை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், இதற்கென தேசிய பாதீட்டு திணைக்களம், தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் வெளி நாட்டு வளங்கள் திணைக்களம் ஆகிய நிறுவனங்கள் முனைப்புடன் தமது பங்களிப்பை வழங்கியுள்ளன.

சிறு மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முனைவர்களுக்குத் தேவையான உதவிகள் வழங்கப்பட்ட வண்ணம் விவசாயக் கைத்தொழிலுடன் தொடர்புடைய பணிகள் முன்னெடுக்கப்பட்டதுடன், இது தொடர்பாக அபிவிருத்தி நிதி திணைக்களம் அரச மற்றும் ஏனைய வணிக வங்கிகளை தொடர்புபடுத்திய வண்ணம் பல்வேறு கருத்திட்டங்களை செயற்படுத்தி சமூக பொருளாதார நிலைகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் முன்னுரிமை மிக்க நோக்கமாக, பேண்தகு அபிவிருத்தி இலக்குகளின் அடிப்படையில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை செயற்படுத்துதல் எனும் விடயம் காணப்படுகின்றது. அதனடிப்படையில், பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பாக அமைச்சின் பணி நோக்கை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் ஆகியவற்றை 2023 ஆம் ஆண்டு காலப் பகுதி முழுதும் செயற்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

அத்தியாயம் 06 – மனித வள விபரம்

6.1 பதவியணி முகமைத்துவம்

	அனுமதியளிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை	தற்போது காணப்படுகின்ற பதவியணியின் எண்ணிக்கை	வெற்றிடம்/ (மிகை)**
சிரேட்ட நிலை	62	32	30
மூன்றாம் நிலை-	07	05	02
இரண்டாம் நிலை	189	138	51
ஆரம்ப நிலை	162	136	26
மொத்தம்	**420**	**311**	**109**

**நிறுவனத்தின் செயலாற்றுகையின் பொருட்டு மனித வளங்களின் பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தியுள்ள விதம்

நிறுவனத்தின் சேவையின் தேவைப்பாடு காணப்படுகின்ற பதவியணியின் மூலம் முகாமை செய்யப்பட்டது.

6.3 மனித வள அபிவிருத்தி

Name of the Programme	No. of emplo - yees trained	Duration	Total Investment (Rs'000)		Nature of the programme (local/Foreign	Output/acquired knowledge*
			Local	Foreign		
ITEC : International Programme of Cooperate government & Leadership for Executives from the Financial System at the National Institute of Bank Management	01	2023.03.06-2023.03.11			Foreign	
Seminar on Government Effectiveness and Efficiency for Developing Countries	01	2023.07.10-2023.07.23			Foreign	
Seminar on Human Resources for Developing Countries	01	2023.07.12-2023.07.25			Foreign	
ADB: Call for Nominations of Government Representatives to the 2023 Asia Clean Energy Forum	01	2023.07.13-2023.07.16			Foreign	
Fintech Market Development and Policy Implications (FINTECH)	02	2023.07.17-2023.07.21			Foreign	

ADB: Request for Nominations for the Regional Workshop on Aligning Climate Change and Disaster Risk Management Actions in South Asia	01	2023.07.27-2023.07.29			Foreign	
Seminar on Enhancing Performance of Young Officials in Developing Countries (AIBO)	02	2023.08.16-2023.08.29			Foreign	
Green Public Procurement & Eco Lable for Circular Economic - Regional Knowledge Exchange	01	2023.08.29-2023.08.30			Foreign	
Seminar on the Construction and Management of Industrial Park for Sri Lanka	01	2023.10.13-2023.10.26			Foreign	
Training Programme for Women's Economic Empowerment Policy Makers	01	2023.10.15-2023.10.25			Foreign	
Seminar on Poverty Reduction and Development under the Global Development Initiative	01	2023.10.18-2023.10.27			Foreign	
Seminar on Poverty Eradication and Rural Revitalization for Countries around the Indian Ocean	02	2023.11.07-2023.11.20			Foreign	
Advanced Seminar for Financial Leaders from the Perspective of the Belt and Road Initiative	01	2023.12.01-2023.12.08			Foreign	
Seminar on Development of Tea Culture and Tea Industry for Developing Countries - AIBO	02	2023.11.15-2023.12.05			Foreign	
Seminar on Trade Facilitation for the "Belt and road Initiative Countries	01	2023.11.08-2023.11.21			Foreign	
Seminar on Economic Diplomacy AIBO	01	2023.11.23-2023.12.06			Foreign	
Tamil Course for Official Language Proficiency to be achieved by Government Officials as per Public Administration Circular No. 18/2020	40	100 hrs From 2023.10.11	Rs. 75,000		Local	

அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை

இலக்கம்.	ஏற்புடைய தேவைப்பாடு	இணக்கப்பாட்டு நிலைமை (இணக்கமானது/ இணக்கமற்றது)	இணக்கமற்றதாயின் அதுபற்றி சுருக்கமாக விபரிக்க	எதிர்காலத்தில் இணக்கமற்றதினை தவிர்ப்பதற்கு முன்மொழியும் சரியான நடவடிக்கையாது
1	பின்வரும் நிதி அறிக்கைகள் / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன			
1.1	வருடாந்த நிதி அறிக்கைகள்	இணக்கமானது		
1.2	அரச அலுவலர்கள் முற்பணக் கணக்கு	இணக்கமானது		
1.3	வணிக மற்றும் உற்பத்தி முற்பணக் கணக்குகள் (வர்த்தக முற்பணக் கணக்குகள்)	ஏற்புடையதல்ல.		
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	ஏற்புடையதல்ல.		
1.5	விசேட முற்பணக் கணக்கு	ஏற்புடையதல்ல.		
1.6	ஏனைய	-		
2	புத்தகங்கள் மற்றும் பதிவுகளைப் பேணல் (நி.பி.445)			
2.1	பொது நிர்வாக சுற்றறிக்கை 267/2018 இன் படி நிலையான சொத்து பதிவேட்டை பராமரித்தல் மற்றும் இற்றைப்படுத்தல்.	இணக்கமானது		
2.2	ஆள்சார் வேதனாதிகள் பதிவு / தனிப்பட்ட ஊதிய அட்டைகளை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.3	கணக்காய்வு வினாக்கள் பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் பதிவைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சுருக்கங்களையும் (CIGAS) தயார் செய்து பொது திறைசேரிக்கு உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
2.6	காசோலை மற்றும் காசுக் கட்டளை பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.7	பொருட் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.8	இருப்புப் பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.9	இழப்பு பதிவேட்டினை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.10	பொறுப்பு பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
2.11	அடிக்கட்டை புத்தகங்களின் (GA – N20) பதிவேட்டை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		

3	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை ஒப்படைத்தல் (நி.பி. 135)**			
3.1	நிதி அதிகாரங்கள் நிறுவனத்திற்குள் பகிரப்பட்டன	இணக்கமானது		
3.2	நிதி அதிகாரங்கள் பகிரப்படுகின்றமை பற்றி நிறுவனத்திற்குள் தெரியப்படுத்தப்பட்டது	இணக்கமானது		
3.3	ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலுவலர்கள் மூலம் இடம்பெறும் வகையில் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது.	இணக்கமானது		
3.4	2014.05.11 திகதிய அரச கணக்கு சுற்றறிக்கை இல. 171/2004 இன் படி, அரசு ஊதிய மென்பொருள் தொகுப்பின் செயல்பாடுகள் கணக்காளர்களின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை.	இணக்கமானது		
4	**வருடாந்த திட்டத்தினைத் தயாரித்தல்**			
4.1	வருடாந்த செயற்பாட்டு திட்டத்தைத் தயாரித்தல்	இணக்கமானது		
4.2	வருடாந்த கொள்முதல் திட்டத்தைத் தயாரித்தல்	இணக்கமானது		
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வுத் திட்டம் தயாரித்தல்	இணக்கமானது		
4.4	வருடாந்த மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் அதை தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களத்தில் (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்	இணக்கமானது		
4.5	வருடாந்த காசுப் பாய்ச்சல் அறிக்கை திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	இணக்கமானது		
5	**கணக்காய்வு விசாரணைகள்**			
5.1	அனைத்து கணக்காய்வு வினாக்களுக்கும் கணக்காய்வாளர் நாயகத்துக்கு குறிப்பிட்ட திகதியில் பதில் அளிக்கப்பட்டுள்ளது	இணக்கமானது		
6	**உள்ளகக் கண்காய்வு**			
6.1	நி.பி. 134(2) DMA 2019-1 படி, ஆண்டின் தொடக்கத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்தாலோசித்த பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்.	இணக்கமானது		
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாதத்திற்குள் பதிலளித்தல்.	இணக்கமானது		
6.3	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் துணைப்பிரிவு 40(4) இன் அடிப்படையில் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல்.	இணக்கமானது		
6.4	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் நகல்களையும் 134(3) நிதி பிரமானக் குறிப்பின் அடிப்படையில் கணக்காய்வாளர் நாயகத்துக்கு வழங்குதல்.	இணக்கமானது		

7	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு			
7.1	DMA சுற்றறிக்கை இல. 1-2019 இன் படி, குறைந்தது 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன	இணக்கமானது	இரண்டாவது காலாண்டுக்காக நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமையின் காரணமாக நடாத்தப்படவில்லை. அதன் பிரகாரம், 2022 ஆம் ஆண்டில் 03 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.	
8	ஆதன முகாமைத்துவம்			
8.1	ஆதன முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 01/2017 இன் 07 ஆம் அத்தியாயத்தின்படி, சொத்து பெறுகை மற்றும் அகற்றல் பற்றிய தகவல்களை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்	இணக்கமானது		
8.2	மேற்கண்ட சுற்றறிக்கையின் 13 ஆம் அத்தியாயத்தின்படி, சுற்றறிக்கையின் விதிகளை அமுல்படுத்துவதற்கும், அத்தகைய அதிகாரியை கம்ப்ரோலர் ஜெனரல் அலுவலகத்திற்கு அனுப்புவதற்கும் பொருத்தமாதொரு தொடர்பு அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.	இணக்கமானது		
8.3	அரச நிதி சுற்றறிக்கை இல. 01/2020 இன் படி, பொருட்கள் கணக்கெடுக்கப்பட்டு, தொடர்புடைய அறிக்கைகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது		
8.4	சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட காலகட்டத்தில் வருடாந்த கணக்கெடுப்பு மூலம் அதிகப்படியான, குறைபாடுகள் மற்றும் பிற பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன	இணக்கமானது		
8.5	நி.பி 772 இன் படி கழிக்கப்பட்ட பொருட்களை அகற்றுதல் இடம்பெற்றது	இணக்கமானது		
9	வாகன முகாமைத்துவம்			
9.1	குழும வாகனங்களுக்கான தினசரி இயக்க அறிக்கை மற்றும் மாதாந்த சுருக்க அறிக்கைகளைத் தயாரித்து அவற்றை உரிய திகதியில் கணக்காய்வாளர்	இணக்கமானது		

	நாயகத்துக்கு சமர்ப்பித்தல்			
9.2	கழிப்பனவு செய்யப்பட்ட வாகனங்கள் கழிப்பனவு செய்யப்பட்டு 06 மாதங்களுக்குள் அகற்றப்படுதல் வேண்டும்.	இணக்கமானது		
9.3	வாகன பதிவு புத்தகங்கள் பராமரிக்கப்படுவதுடன் புதுப்பிக்கப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
9.4	ஒவ்வொரு வாகன விபத்தும் நி.பி 103,104,109 மற்றும் 110 இன் படி நட வடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.	இணக்கமானது		
9.5	2016.12.29 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 2016/30 இன் பத்தி 3.1 இன் விதிகளின்படி வாகனங்களின் எரிபொருள் பாவனையினை மீண்டும் பரிசீலித்தல்.	இணக்கமானது		
9.6	குத்தகை வாகனங்களின் உரித்து பதிவு புத்தகம் குத்தகைக் காலத்தின் பின்னர் மாற்றப்படும்.	இணக்கமானது		
10	**வங்கி கணக்குகளின் முகாமை**			
10.1	உரிய திகதிகளில் வங்கி கணக்கிணக்க அறிக்கைகளைத் தயாரித்து சான்றளித்தல் மற்றும் கணக்காய்வுக்கு சமர்ப்பித்தல்	இணக்கமானது		
10.2	மீளாய்வு வருடத்தில் காணப்பட்ட செயற்படாத வங்கிக் கணக்குகளினைத் தீர்த்தல்	ஏற்புடையதல்ல.		
10.3	வங்கி கணக்கிணக்க அறிக்கையில் வெளிப்படுத்தப்பட வேண்டிய நிலுவைகளை வெளிப்படுத்துதல் மற்றும் சரிசெய்தல் மற்றும் ஒரு மாதத்திற்குள் அத்தகைய நிலுவைகளை தீர்த்தல்.	இணக்கமானது		
11	**நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தல்**			
11.1	ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகளை வரையறைகளை மீறாதபடி செலவிடல்.	இணக்கமானது		
11.2	நி.பி. 94 (1) இன்படி, ஏற்பாடு செய்யப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் ஆண்டின் இறுதியில் எஞ்சிய ஒதுக்கீட்டு வரம்பை மீறாத பொறுப்புக்கள் வருட இறுதியில் தொடர்ந்திருக்கும்.	இணக்கமானது		
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	எல்லைகளுக்கு இணங்குதல்	இணக்கமானது		
12.2	நிலுவையிலுள்ள கடன் நிலுவை குறித்து சரியான நேரத்தில் பகுப்பாய்வு செய்திரு த்தல்.	இணக்கமானது		
12.3	ஒரு வருடத்திற்கும் மேலாக நிலுவையில் உள்ள கடன்களை அடைத்தல்	இணக்கமானது		
13	**பொது வைப்புக் கணக்கு**			
13.1	காலாவதியான வைப்புக்களை அகற்றுவதற்கு நி.பி 571 பிரகாரம்	இணக்கமானது		

	நடவடிக்கை எடுத்தல்			
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டு கணக்கை புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்	இணக்கமானது		
14	**புணி முன்பணக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தகத்தில் மீதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது	இணக்கமானது		
14.2	நி.பி. 371 இன் அடிப்படையில் தற்செயலான இடைக்கால வழங்கல், அத்தகைய பணி நிறைவடைந்து மாதத்திற்குள் தீர்க்கப்படும்	இணக்கமானது		
14.3	நி.பி. 371 இன் படி அங்கீகரிக்கப்பட்ட வரம்பை மீறாத தற்காலிக இடைக்கால வழங்கல்	இணக்கமானது		
14.4	மாதந்தோறும் திறைசேரி புத்தகங்களுடன் பணி மற்பணக் கணக்கு மீதி கணக்கிணக்கம் செய்யப்படுதல் வேண்டும்	இணக்கமானது		
15	**வருமான கணக்கு**			
15.1	ஒழுங்கு விதிகளின்படி சேகரிக்கப்பட்ட வருமானத்தை திருப்பிச் செலுத்தியிருக்க வேண்டும்	ஏற்புடையதல்ல.		
15.2	திரட்டப்பட்ட வருமானம் வைப்புக் கணக்கில் வரவு வைக்காமல் நேரடியாக வருமானத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்	ஏற்புடையதல்ல.		
15.3	நி.பி 176 இன் படி நிலுவைத் தொகையை கணக்காய்வாளர் நாயகத்துக்குச் சமர்ப்பித்தல்	ஏற்புடையதல்ல.		
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எல்லைக்குள் பணியாளர்களைப் பராமரித்தல்	இணக்கமானது		
16.2	ஊழியர்களின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைகளின் எழுதப்பட்ட பட்டியல்களை வழங்குதல்	இணக்கமானது		
16.3	2017.09.20 தேதியிட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கை இல. 04/2017 இன் படி அனைத்து அறிக்கைகளும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.	இணக்கமானது		
17	**பொது மக்களுக்கான தகவல் வழங்கல்**			
17.1	தகவல் உரிமைச் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளின் அடிப்படையில் தகவல் அதிகாரி ஒருவரை நியமித்து தகவல் வழங்கும் அட்டவணையொன்றை இற்றைப்படுத்தி பேணிவருதல்.	இணக்கமானது		
17.2	அமைப்பு பற்றிய தகவல்களை அதன் வலைத்தளத்தின் மூலம்	இணக்கமானது		

	வழங்குதல் மற்றும் வலைத்தளம் அல்லது மாற்று வழிகள் வழியாக நிறுவனத்தின் மீதான பொது கருத்துகள் / குற்றச்சாட்டுகளை எளிதாக்குதல்.			
17.3	தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் 08 மற்றும் 10 பிரிவுகளின் படி ஆண்டுக்கு இரண்டு அல்லது ஒரு முறை அறிக்கைகளை சமர்ப்பித்தல்.	இணக்கமானது		
18	**பிரசைகள் பட்டயத்தினைச் செயற்படுத்தல்**			
18.1	பொது நிர்வாகம் மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 05/2008 மற்றும் 05/2018 (1) இன் படி பிரசைகள் பட்டயம்/ பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை உருவாக்குதல் மற்றும் செயற்படுத்துதல்.	இணக்கமானது		
18.2	சுற்றறிக்கையின் பத்தி 2.3 ஐப் பொறுத்தவரை, பிரசைகள் பட்டயம் / பிரசைகள் வாடிக்கையாளர் சாசனத்தை செயல்படுத்தவும் அதை கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும் நிறுவனம் ஒரு பொறிமுறையை அமைத்துள்ளது.	இணக்கமானது		
19	**மனித வள திட்டத்தினைத் தயாரித்தல்**			
19.1	2018.01.24 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 02/2018 இன் இணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரித்தல்.	இணக்கமானது		
19.2	ஊழியர்களின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குறைந்தபட்சம் 12 மணிநேர பயிற்சி ஆண்டுக்கு 12 மணி நேரத்திற்கும் குறையாமல் இருப்பதை மேற்கண்ட மனித வள திட்டம் உறுதி செய்ய வேண்டும்.	இணக்கமானது		
19.3	மேற்கண்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் வருடாந்த செயற்திறன் ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.	இணக்கமானது		
19.4	மேற்கண்ட சுற்றறிக்கையின் 6.5 வது பந்திக்கு ஏற்ப மனிதவள மேம்பாட்டுத் திட்டம், திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் திறன் மேம்பாட்டுத் திட்டங்களை செயற்படுத்தல் ஆகியவற்றின் பொறுப்பில் ஒரு மூத்த அதிகாரியை நியமித்தல்.	இணக்கமானது		
20	**கணக்காய்வு பந்திகளுக்கான பதில்கள்**			
20.1	முந்தைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட கணக்காய்வு பத்திகளால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை சரிசெய்தல்	இணக்கமானது		